**OS.No.203/2024, Dated 02.07.2025**

The witness sworn under Oaths Act 1969 on this the 2nd day of July 2025.

**வா.சா.2 - ராதாகிருஷ்ணன் த/பெ.ரேணு வரவழைக்கப்பட்டு 1, 4 முதல் 7 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை.**

எனது சொந்த ஊர் விழுப்புரம் மாவட்டம் மேல் மலையனூர் தாலுகா, ஈயக்குணம் கிராமம் ஆகும். எனக்கும் இந்த வழக்கிற்கும் சம்பந்தம் இல்லை. நான் மூன்றாம் தரப்பினர் ஆவேன். வாதி லட்சுமி எனது உறவினர் தான் என்றால் சரிதான். வாதி லட்சுமி எதற்காக இந்த வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் நிலத்திற்காக தாக்கல் செய்துள்ளார். அந்த நிலம் பெரண்டாவரம் ஊரில் உள்ளது. அந்த ஊர் ஈச்சூர் அருகில் உள்ளது. இந்த வழக்கில் 1 முதல் 6 அயிட்ட சொத்துக்களில் நிலங்களும் ஒரு வீடு மற்றும் ஒரு மனையும் குறிப்பிடப்பட்டுள்ளது. தாவா சொத்துக்கள் ஆதியில் யாருக்கு பாத்தியப்பட்டிருந்தது என்று எனக்கு தெரியாது. வாதி லட்சுமியின் தாய் தகப்பனார் பெயர் எனக்கு தெரியாது. அவர்கள் உயிருடன் இல்லை. லட்சுமியின் தகப்பனார் எந்த வருடம் இறந்தார் என்று எனக்கு தெரியாது. 6 அயிட்ட சொத்துக்களின் சர்வே எண்கள் எனக்கு தெரியாது. வீட்டினுடைய சர்வே எண்ணும் எனக்கு தெரியாது. அந்த இடத்தின் விஸ்த்தீரனமும் எனக்கு தெரியாது. தாவா சொத்து உள்ள ஊருக்கு நான் மூன்று முறை சென்றுள்ளேன். நான் சுமார் 15 வருடங்களாக அந்த ஊருக்கு சென்றதில்லை. லட்சுமியின் உடன் பிறந்தவர்கள் சொக்கலிங்கம், மணி, ருக்மணி, ராதா ஆகியோர் ஆவார்கள். மணி என்பவர் இறந்துவிட்டார். அவர் எப்போது இறந்தார் என்று எனக்கு தெரியாது. மணிக்கு திருமணமானதா என்று எனக்கு தெரியாது. லட்சுமி குடும்பத்தை எனக்கு எவ்வளவு வருடங்களாக தெரியும் என்றால் 35 வருடங்களாக தெரியும். வாதி லட்சுமி எனக்கு சின்னம்மா முறை என்பதால் எனக்கு அவர்கள் குடும்பத்தை தெரியும். வாதியின் தகப்பனாருக்கு எத்தனை மனைவிகள் என்ற விபரம் எனக்கு தெரியாது. லட்சுமியின் தகப்பனார் உயிருடன் இருந்தபோது பாகப்பிரிவினை ஏற்பட்ட விபரம் எனக்கு தெரியாது. லட்சுமியின் தகப்பனார் உயிருடன் இருந்தபோது யார் யாருக்கு என்ன சொத்து எழுதி வைத்தார் என்றும், யார் யாருக்கு திருமணம் செய்து வைத்தார் என்றும் எனக்கு தெரியாது. சொக்கலிங்கம் என்பவர் லட்சுமியின் அண்ணன் ஆவார். அவரை நான் இதற்கு முன்பு பார்த்துள்ளேன். அவர் இராணுவத்தில் பணியாற்றினார். 1ம் பிரதிவாதி இராணுவத்தில் பணிபுரிந்ததால் அவரும் வாதிக்கு நகைகள் போட்டு திருமணம் செய்து வைத்தார் என்றால் இல்லை. வாதியின்

தகப்பனார் உயிருடன் இருந்தபோது இது சம்பந்தமாக என்னுடன் எதுவும் பேசவில்லை என்றால் சரிதான். அந்த நிலத்தல் என்னென்ன பயிர் வைக்கிறார்கள் என்று எனக்கு தெரியாது. அந்த தாவா சொத்தில் உள்ள வீடு என்ன வகையான வீடு என்றும் எனக்கு தெரியாது. தாவா சொத்துக்கள் அனைத்தும் அருகருகே தான் உள்ளது. தாவா சொத்துக்கள் சம்பந்தமாக எனக்கு எந்த விபரமும் தெரியாது என்றாலும், வாதிக்கு ஆதரவாக நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. வாதியின் தகப்பனாரிடம் 1ம் பிரதிவாதி ருக்மணிக்கும் ராதாவிற்கும் நல்ல முறையில் திருமணம் செய்து வைப்பது குறித்து பேசிய விபரங்கள் எனக்கு தெரியாது. வாதி குடும்பத்தில் ஏற்கனவே பாகப்பிரிவினை ஏற்பட்டுவிட்டதால் வாதி கோரியுள்ள பரிகாரம் அவருக்கு கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. எனவே வாதியின் தாவா தள்ளுபடி செய்யத்தக்கது என்றால் சரியல்ல.

2, 3 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணைக்காக ஒத்திவைக்கப்படுகிறது.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொன்னதை என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் தட்டச்சு செய்யப்பட்டு பின்னா் சாட்சியால் சரி என ஒப்புக்கொண்டு என் முன்பு கையொப்பம் செய்தார்.

SARANYA S

Digitally signed by SARANYA S
Date: 2025.07.02 18:12:04 +0530

சார்பு நீதிபதி,

வந்தவாசி

சாட்சியின் கையொப்பம்.